ஞாநி

# தேர்தல் முறை: அடியோடு மாற்றவேண்டும்



தேர்தலில் முதல் ஊதாரித்தனம் பிரச்சாரம். இதைத் தவிர்க்க , போட்டியிடும் வேட்பாளர் யார் எவர் என்பதை வாக்காளர்களுக்குத் தெரியச் செய்ய வேண்டும். போட்டியிடும் கட்சியின் கொள்கை, செயல்திட்டம் (அப்படி ஏதாவது இருந்தால் ) என்ன என்று சொல்ல வேண்டும். இரண்டையுமே அரசுச் செலவிலிருந்தே செய்யலாம். இப்போது போலியோ தடுப்புச் சொட்டு மருந்துக்கு அரசு விளம்பரங்களால் மக்கள் கவனத்தை ஈர்ப்பதுபோல் , தேர்தல் ஆணையம் இதையும் வெகு எளிதாகச் செய்துவிட முடியும். வேட்பு மனுக்கள் இறுதி செய்யப்பட்டதும் வேட்பாளர் பெயர், சின்னத்துடன் மாதிரி வாக்குச் சீட்டைத் தயாரித்துத் தபால்காரர்கள் மூலம் ஒவ்வொரு வீட்டுக்கும் கொடுத்துவிட முடியும். ஒரே வாரத்துக்குள் எல்லா வீடுகளுக்கும் வேட்பாளர் பட்டியல் கிடைத்துவிடும். --

கட்சிகள் தங்கள் கொள்கை என்ன , செயல் திட்டம் என்ன என்பதை விளக்க , தற்போது தூர்தர்ஷன், ஆல் இந்தியா ரேடியோ இரண்டிலும் நேரம் ஒதுக்குவது போல எல்லாத் தனியார் தொலைக்காட்சிகளிலும் வானொலிகளிலும் ஆணையமே ஸ்லாட் எடுத்து நேரத்தைக் கட்சிகளுக்குப் பங்கிட்டுத் தரலாம். இதேபோலப் பத்திரிகை விளம்பரங்களுக்கும் சமமான அளவு இடத்தை ஆணையமே வாங்கி விநியோகித்து விடலாம்.

வேட்பாளர்கள் தொகுதியில் வாக்காளர்களை நேரடியாகச் சந்தித்துப் பிரச்சாரம் செய்வதற்கு ஆளுக்கு ஒரு வாகனத்தையும் தினசரி இத்தனை கிலோமீட்டர் என்ற அடிப்படையில்

பெட்ரோல் செலவையும் ஆணையமே அளிக்க வேண்டும். இவை தவிர எல்லா ஊர்களிலும் எல்லாக் கட்சிகளுக்குமாகத் தலா ஓரிரு பொதுக் கூட்டங்களை ஆணையமே மேடை அமைத்துத் தந்துவிடலாம். - இதற்காக ஒரு தேர்தல் செலவு நிதியை ஆணையம் உருவாக்கி , நன்கொடை தரும் கம்பெனிகள் , அமைப்புகள், தனிநபர்கள் ஆகியோருக்கு வரி விலக்கு தரலாம்.

தேர்தலின் அடுத்த கட்டம் வாக்குப் பதிவு. அன்றைய தினம் கட்சிகள் வாக்காளர்களைக் 'குளிப்பாட்டி' சாவடிக்கு அழைத்து வருவதற்கும் சில சாவடிகளைக் கைப்பற்ற ரவுடித்தனம் செய்வதற்கும்தான் செலவு செய்கின்றன.

இதற்குச் சரியான தீர்வு, வாக்காளர்கள் சாவடிக்கு வருவதற்குப் பதில், சாவடி வாக்காளர்களை நோக்கிப் போவதுதான்.

வாக்குப் பதிவு நாளன்று ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும். வாக்குப் பதிவு நேரத்தின் போது யாரும் வீட்டை விட்டு வெளியில் வரக் கூடாது. போலீஸ் பாதுகாப்புடன் மொபைல் வாக்குச் சாவடி வாகனம் தெருத் தெருவாக வரும். ஒவ்வொரு தெருவுக்கும் தண்ணீர் லாரி வந்ததும் குடத்துடன் போய் வரிசையாக நிற்பது போல , அந்தத் தெரு வாக்காளர்கள் ஓட்டுப் போட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பிவிடலாம். வாக்கு வாகனத்துக்குள் தேர்தல் அதிகாரியுடன் கட்சிப் பிரதிநிதிகளும் இருக்கலாம். இந்த ஏற்பாட்டில் கட்சிகளுக்குச் செலவு எதுவும் கிடையாது. அரசுக்கு இப்போதைய தேர்தல் முறையில் பூத் அமைக்க ஆகும் அதே செலவுதான் இதற்கும் ஆகப்போகிறது. இதன் மூலம் 'கள்ள ஓட்டுகளை ஒரேயடியாக ஒழித்துவிடலாம். அதிகமானவர்கள் வாக்களிக்கச் செய்யலாம். யாரும் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்ற முடியாது. -

மூன்றாவது கட்டம் வாக்கு எண்ணிக்கை. மின்னணு இயந்திரங்கள் இதை விரைவானதாகவும் எளிதானதாகவும் ஆக்கிவிட்டன. இம்முறையில் ஓட்டு எண்ணும் இடத்தில் கட்சிகளின் ரவுடித்தனம் செல்லுபடியாகவில்லை என்பது கடந்த தேர்தலிலேயே நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இந்த மாற்று முறைகள் எல்லாம் ஓரளவுக்குப் பணத்தின் செல்வாக்கைக் கட்டுப்படுத்திச் சம வாய்ப்பு நிலையை உருவாக்கக்கூடியவை.

தேர்தல் முறையையே அடியோடு மாற்றியமைக்கக்கூடிய இன்னும் சில புரட்சிகரமான மாற்றங்கள் தேவை. அவை என்ன?

தொகுதி மேம்பாட்டு நிதி என்ற பெயரில் வருடத்துக்கு சுமார் 1200 கோடி வீதம் பத்தாண்டுகளில் பன்னிரண்டாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் எம்.பி.களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் கணிசமான பணத்துக்குக் கணக்கே இல்லை என்று தற்போது மத்திய தணிக்கை அதிகாரிகளும் விஜிலன்ஸ் கமிஷனும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஒரு தொகுதியின் நலனைக் கவனிக்க வேண்டியது யார் ? எம்.எல்.ஏவா, எம்.பியா, வார்டு கவுன்சிலரா? இப்போது இருக்கும் நம்முடைய அரசியல் அமைப்பு முறையில் ஏராளமான எம்.எல்.ஏக்கள், எம்.பிகள், பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி கவுன்சிலர்கள் என்று 'பொதுநல நிர்வாக'ப் பிரதிநிதிகள் இருப்பதால் இவர்களுக்கெல்லாம் அரசுப் பணத்தைச் சம்பளமாக, அலவன்சாக, போக்குவரத்துப் படியாக நிறையச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இரண்டாவதாக இத்தனை பேர் ஒவ்வொரு தேர்தலிலும் ஜெயித்து வந்து ஆட்சியைப் பிடிப்பதற்கு, ஒவ்வொரு கட்சியிலும் அத்தனை பேர் வீதம் குறைந்தது நான்கு

மடங்கு நபர்கள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். இதற்குப் பெரும்பணம் தேவைப்படும் சூழல்தான் ஊழலின் ஊற்றுக்கண்.

உண்மையில் ஒரு தொகுதியின் நலனைக் கவனிக்க இத்தனை பேர் தேவையே இல்லை. ஒரே தொகுதியில் நிறையப் பஞ்சாயத்து அல்லது நகராட்சி கவுன்சிலர்களும் அதே தொகுதியில் எம்.எல்.ஏவும் எம்.பியும் இருக்கிறார்கள். ஒரு தொகுதியின் அன்றாடப் பிரச்சினைகள் குடிநீர் , மின்சாரம், சாலை, போக்குவரத்து, சட்டம் ஒழுங்கு சார்ந்தவைதான். இவற்றையே ஏன் கவுன்சிலர், எம்.எல்.ஏ, எம்.பி மூவரும் கவனிக்க வேண்டும்?

எம்.எல்.ஏ என்றால் சட்டங்களை உருவாக்கும் மன்றத்தின் உறுப்பினர். அவர் வேலை சட்டங்களை உருவாக்குவது, நிறைவேற்றுவது, திருத்துவது, மாற்றுவது போன்றவைதான். இதே சட்டம் இயற்றும் வேலையை மாநில அளவில் எம்.எல்.ஏவும் தேச அளவில் எம்.பியும் செய்ய வேண்டும். இதுதான் கோட்பாடு. எனவே நடைமுறையில் இவர்களுக்கென்று எந்தத் தொகுதியும் தேவையே இல்லை. தொகுதியைக் கவனிப்பதோ தொகுதியின் சார்பாகப் பணியாற்றுவதோ இவர்கள் வேலையே அல்ல. அது பஞ்சாயத்து , நகராட்சி, மாநகராட்சி கவுன்சிலர்களின் வேலை.

எம்.எல்.ஏவுக்கே தொகுதி அடிப்படை தேவையில்லை என்கிறபோது எம்.பிக்கு நிச்சயம் அவசியம் இல்லை. இவர்களைத் தொகுதி அடிப்படையில் வைத்திருப்பதால் எந்தப் பயனும் இல்லை. ஒரு எம்.எல்.ஏ தொகுதியை ஒரு முறை சுற்றி வருவதற்கே குறைந்தது பத்து நாள்கள் தேவை. எம்பிக்கு அறுபது நாள்கள். தொகுதி அடிப்படையை நீக்கிவிட்டால் , எம்.எல்.ஏ, எம்.பி தொகுதிக்கே வருவதில்லை என்ற வருத்தங்களும் உருவாகப்போவதில்லை , தொகுதியில் கண்ணில் பட்டுக்கொண்டே இருக்க வேண்டியவர் கவுன்சிலர் மட்டும்தான்.

இந்த முடிவு செய்துவிட்டால் , அடுத்த பெரிய லாபம் எம்.எல்.ஏக்கள் , எம்.பிகள் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைத்துவிடலாம் என்பதுதான். தொகுதி அடிப்படை இருப்பதால்தான் தமிழ் நாட்டில் 234 எம்.எல்.ஏக்களும் இந்திய அளவில் 543 எம்.பிகளும் தேவைப்படுகிறார்கள்.

தொகுதி அடிப்படையை நீக்கிவிட்டால் ஒவ்வொரு மாநிலத்துக்கும் மொத்தமாக நூறு எம்.எல்.ஏக்கள் போதும். மக்களவைக்கு மொத்தமாக இருநூறு எம்.பிகள் போதும். எல்லா மாநிலங்களுக்கும் சமமான எம்.பி எண்ணிக்கை அளித்தால் தான் உண்மையான மாநில சமத்துவம் வர முடியும்.

தொகுதி அடிப்படை இல்லாதபோது இனி எந்த அடிப்படையில் எம்.பிகளையோ எம்.எல்.ஏக்களையோ தேர்ந்தெடுப்பது ? கட்சி அடிப்படை மட்டும்தான். வாக்குச் சீட்டில் கட்சிகளின் பெயரும் சின்னமும் மட்டுமே இருக்கும். உங்களுக்குப் பிடித்த கட்சிக்கு நீங்கள் வாக்களிக்கலாம். மொத்த வாக்குகளில் எந்தக் கட்சிக்கு எவ்வளவு வாக்கு என்று கணக்கிட்டு அதற்கேற்ப எம்.எல்.ஏ சீட் தரப்படும். ஒரு கட்சிக்குப் பத்துச் சதவிகித வாக்கு கிடைத்திருந்தது என்றால் மொத்த எம்.எல்.ஏ சீட்டுகளான 200 இல் 20 சீட் தரப்படும். இதன்படி, எல்லாக் கட்சிகளுக்கும் அவை பெற்ற வாக்குகளின் அடிப்படையில் சீட் கிடைக்கும். பிறகு அந்தக் கட்சி தனக்குக் கிடைத்த சீட்டுகளுக்கான எம்.எல்.ஏ.க்கள் யார் யார் என்று பெயர்களை அறிவிக்கலாம். இதேபோல் எம்.பி. தேர்தலிலும் செய்ய வேண்டும்,

இந்த முறையைப் பின்பற்றினால் தனியே தலித் தொகுதிகளோ பெண்கள் தொகுதிகளோ தேவைப்படாது. ஒவ்வொரு கட்சியும் தனக்குக் கிடைத்த எம்.எல்.ஏ., எம்.பி சீட்டில் இத்தனை

சதவிகிதம் தலித் , பெண் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்துவிடலாம். தவிர ஒரு மகளிர் கட்சியோ தலித் கட்சியோ , இந்தத் தேர்தல் முறையில் , எல்லாத் தொகுதிகளிலும் உள்ள பெண்கள் , தலித்துகள் ஓட்டைப் பெற்று தானே கணிசமான சீட்டுகளை அடைய முடியும்.

உலகத்தில் பிரிட்டன் , அதன் முன்னாள் அடிமை நாடுகள் , அமெரிக்கா தவிர மீதி பெரும்பாலான நாடுகளில் (ஜெர்மனி, ஸ்வீடன், ஆஸ்திரேலியா, ஜப்பான், ருஷ்யா, இஸ்ரேல்..) விகிதாச்சார முறைதான் பின்பற்றப்படுகிறது.

**இந்த முறையில் உள்ள வசதிகள்:**

**1.** கட்சிக்கு இப்போது கிடைக்கும் ஓட்டுக்கும் சீட்டுக்கும் சம்பந்தம் இல்லை என்ற கோளாறு நீக்கப்படும். உதாரணமாக , **1996** தேர்தலில் அ.தி.மு.கவுக்குக் கிடைத்த ஓட்டு சதவிகிதம் **21.50.** ஆனால் சீட்டு வெறும் நான்குதான். இதே கட்சிக்கு **2001**இல் கிடைத்த ஓட்டு சதவிகிதம் **29.92.** இந்த முறை **132** சீட்டுகள்!

**1967**இல் காங்கிரஸ் கட்சி ஆட்சியை இழந்த தேர்தலில் அதற்குக் கிடைத்த ஓட்டு சதவிகிதம் **41.38.** எம்.எல்.ஏ சீட் வெறும் **50.** ஆனால் காங்கிரசை விடக் குறைவான ஓட்டுகள் ( **40.77** சதவிகிதம்) பெற்ற தி.மு.க **138** சீட்டுடன் ஆட்சியைப் பிடித்தது.

**2.** இப்போதுள்ள தேர்தல் முறையில் ஒருவருக்கு **49** ஓட்டு கிடைத்தாலும் எதிர்த்தவர் **51** ஓட்டு வாங்கியதால் அவர்தான் வெல்வார் என்ற கோட்பாடு பின்பற்றப்படுகிறது. அந்த **49** வாக்குகளுக்குப் பிரதிநிதித்துவமே கிடையாது. அவர்களில் பலர் அதிருப்தியடைந்து எதிர்காலத்தில் ஓட்டளிக்காமலே போகலாம். ஒவ்வொரு தேர்தலிலும் இந்தியாவில் சராசரியாக **55** சதவிகிதம் வாக்குகள் மட்டுமே பதிவாகின்றன. விகிதாச்சார முறையில் ஒவ்வொரு ஓட்டுக்கும் பயன் இருப்பதால் இன்னும் அதிகம் பேருக்கு வாக்களிக்க உற்சாகம் ஏற்பட்டு ஜனநாயகம் வலுவடையும்.

**3.** எந்தக் கட்சியையும் பிடிக்காவிட்டால் **49 'ஓ'** பிரிவின் கீழ் அதைப் பதிவு செய்ய இப்போதே தேர்தல் சட்டத்தில் இடம் இருக்கிறது. இதை எலக்ட்ரானிக் ஓட்டு இயந்திரத்திலும் சேர்க்கக்கோரி உச்ச நீதிமன்றத்தின் முன்பு மனு செய்யப்பட்டுள்ளது. விகிதாச்சார முறையுடன் இதுவும் இணைந்தால் மக்களின் கருத்துக்கு நிஜமான பிரதிபலிப்பு தேர்தலில் கிட்டும்.

**4.** விகிதாச்சார முறையில் ஒவ்வொரு கட்சியின் உண்மைச் செல்வாக்கும் தெரிந்து போய்விடுவதால், கூட்டணிகள் அமைப்பதும் பேரங்களும் நியாயமான முறையில் நடக்க முடியும்.

உள்ளூர் சிவிக் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டிய பஞ்சாயத்து , நகராட்சி, மாநகராட்சிகளில் மட்டும் கட்சி அடிப்படையை ஒரேயடியாக நீக்கிவிட வேண்டும். இங்கே கட்சிக்காரர்கள் உள்பட சுயேச்சைகள்வரை யாரும் தனி நபராகக் கட்சிச் சின்னம் இல்லாமல் போட்டியிடலாம். இதன் மூலம் உள்ளூரில் உண்மையாகவே மக்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும், கட்சி சார்பற்ற சமூக நலத் தொண்டர்கள் கூட மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்புப் பெருகும்.

இந்தச் சீர்திருத்தத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையில் நேரடி எம்.பி தேர்தலையேகூட ஒழித்து விட முடியும். ஒவ்வொரு மாநிலத்துக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏக்கள் எம்.பிகளைத்

தேர்ந்தெடுத்தால் போதுமானது. அதாவது மக்களவை , மாநிலங்களவை என்ற இரண்டு தேவையில்லை. இந்த முறையை மேற்கொண்டால் தேர்தல் செலவுகள் பெருமளவு குறையும்.

இதெல்லாம் நடைமுறைச் சாத்தியம்தானா என்று பிரமிப்பாக இருக்கலாம். நெட் மூலம் ரயில்வே ரிசர்வேஷன் , தெருவுக்குத் தெரு ஜெராக்ஸ் , எஸ்.டி.டி பூத் , எல்லார் கையிலும் செல்போன் போன்றவைகூட ஒரு காலத்தில் பிரமிப்பூட்டும் கனவுகளாக மட்டுமே தோன்றியவைதான்,

எனவே இவற்றுக்காகக் கனவு காண்போம். விவாதிப்போம். உழைப்போம். ஆனால் இப்போதைக்கு இதில் நம் வசம் இருக்கும் ஒரே ஆயுதம் '49 ஓ' மட்டும்தான். அதைப் பயன் படுத்தினால் அரசியல் கட்சிகளுக்கு பயம் வரும் , அடுத்த கட்டச் சீர்திருத்தங்களை நோக்கி அவற்றை நகர்த்த '49 ஓ'வை இப்போது பரவலாகப் பயன்படுத்த வேண்டும் என்பதே என் பரிந்துரை.

**காலச்சுவடு**

**மே 2006**